உ

சிவமயம்



இஃது

வடராட்சிப் பிரிவில் திக்கம், நீர்வளைப்பதி

# ஸ்ரீ விக்கினேஸ்வரப் பெருமான்

மீதான

# பொன்னூஞ்சல்

## 19.05.2007

ஆக்கம் : பண்டிதர் க. முத்துவேலு

உ

சிவமயம்

## காப்பு

பார்வதியின் கடைக்கணோக் குதித்த பாலா
பரமஉந்தைக் கோருண்மை தந்த சேயே
சீர்பெருகு மகாபா ரதத்தை அன்று
திருநிறை மேருதனிற் பொறித்த ஈசா
பேர்புகழார் திக்கம்சார் நீர்வ ளைக்கண்
பெரிதருள் பாலிக்கும் பெருமா னாரே
பூர்ணநின்மேல் ஊஞ்சலது பாட ஆனேன்
போற்றிநின் பாதமலர் துணையாய் ஆளே.

## நூல்

பிரணவப் பீடம்பொற் பலகை யாகப்
பெருமறைகள் நான்கும் கயிற தாகப்
பரஞான தத்துவமே விதான மாகப்
பரமஉப நிடதங்கள் தூண்க ளாகப்
பரவொளி ரூபமாய்ப் பொலிந்து தோன்றும்
பாங்கான பொன்னூஞ்சல் அமரு வோயே,
நிரந்தரநல் வளஞ்சாரும் திக்கம் மேவும்
நீர்வளை விநாயகரே ஆடீ ரூஞ்சல்.

நந்தியவர் மிருதங்கம் நயந்து கொட்ட
நாரதர், தும்புரு வீணை மீட்கச்
செந்திருவும் கலைமாதும் ஆலத்தி தாங்கச்
சித்தி, புத்தி தேவியர்கள் திவ்யம் காணப்
பொன்னகர மாதர்கள் கவரி வீசப்
புரந்தரனும் குபேரனும் மலர்கள் தூவ
மன்புகழ்சேர் திக்கம் பதியில் மேவும்
வரதரே, நீர்வளையோய், ஆடீ ரூஞ்சல்.

கந்தர்வர், கின்னரர், இசைத்து நிற்பக்
கண்ணனார், குபேரனவர் ஊஞ்சல் ஆட்டப்
பொன்மகளார் கனகதாரா பொழிந்து நிற்பப்
பொதிகைமுனி ஆதியோர் போற்றி சொல்லச்

சின்மய உந்தை, உந்தாய் மருங்கே நின்று
திவ்யநிறை ஆசிகள் கூறி நிற்பச்
சன்மார்க்க நெறிவாழும் திக்கம் மேவும்
தத்துவனே, நீர்வளையோய், ஆடீ ரூஞ்சல்.

உருத்திரர் பன்னிருவர் மருங்கே சூழ்ந்து
உந்தனது திருக்குறிப்பை நாடி நிற்பச்
சர்வமுனி, சித்தர்கள் நின்னைத் தாழ்ந்து
சகலசுப சோபனங்கள் ஆர்ந்து சொல்ல
அருமையுந்தன் தம்பியர் அருகே மேவி
ஆனந்த பரவச ராக நிற்பத்
திருமகிழும் திக்கம் பதியில் ஆளும்
சிவன்மகனே நீர்வளையோய், ஆடீ ரூஞ்சல்.

அகத்தியனார் நின்னருளை ஆர்ந்து வேண்ட
அட்டதிக்குப் பாலகர்கள் ஆஞ்ஞை நாட
ஜெகமாதும் ஜெயமாதும் மேவி ஆங்கே
திவ்யநிறை இன்னருளை வேண்டி நிற்பப்
பகலவனும் வெண்மதியும் மருங்கே நின்று
பரத்துவம் பலகூறிப் பராவி நிற்ப
அகந்தூயர் வாழ்பதியாம் திக்கம் மேவும்
ஐங்கரனே, நீர்வளையோய் ஆடீ ரூஞ்சல்.

இச்சை,கிரி யாசக்தி, ஞான சக்தி
இவைதாமே மதமாகப் பொழியும் மூர்த்தீ,
சச்சிதா னந்தனுந்தை ஊர்ந்த தேரின்
தனியச்சை அறுத்திட்ட தத்வ ரூப,
வச்சிர யாக்கை கொண்ட கயமுகன்தன்
மார்பகத்தை மருப்பதனாற் பிளந்திட் டோயே,
உச்சவளம் கொழிபதியாம் திக்கம் மேவும்
ஒண்பொருளே, நீர்வளையோய் ஆடீ ரூஞ்சல்.

அகவலது அருளிநின்ற அவ்வை தன்னை
அப்பொழுதே கயிலை அடைவித் தோயே

அகத்தியனார் கமண்டலத்தில் தீர்த்தம் தன்னை
ஆங்கே காவிரியாய்ப் பெருக்கி யோயே
குகற்கன்று வள்ளியம்மை கூட்டற் காகக்
குஞ்சரமே யாகக் குறுகி யோயே,
மகத்துவமாம் வள்ளன்மை வாழும் திக்கம்
மகிழ்ந்தமர் நீர்வளையோய் ஆடீ ருஞ்சல்.

பிரணவப் பொருளான பெருமா னாரே
பேசகர உகரமொடு மகரம் ஆனோய்
கரதலங்கொள் அங்குசத்தாற் புலன்க ளாய
களிறுகளை அடக்குவது காட்டும் தேவே
அரசமர நீழலமர் மகிழ்வு கொள்வோய்
அம்பிகையால் விஷ்ணுவுக்காம் சாபம் நீத்தோய்
பரவுபுகழ்த் திக்கம் பதியில் வாழும்
பரன்மகனே, நீர்வளையோய், ஆடீ ருஞ்சல்.

பஞ்ச கிருத்ய வடிவமது ரூப மாகப்
பரம்பொருளின் வேறல்லாப் பரம தேவே
அஞ்செழுத்தால் கணபதீச் சரத்தி லன்று
அரனாரை அர்ச்சித்த அமல மூர்த்தீ
விஞ்சையர்சூழ் கயிலையில்நின் ஆடல் கண்டு
மிகநகைத்த சந்திரனைச் சபித்திட் டோயே
மஞ்சுதவழ் சோலைசூழ் திக்கம் தன்னில்
மகிழ்பதியாம் நீர்வளையோய், ஆடீ ருஞ்சல்.

அகத்தியனார் தாழ்ந்தெழுந்து போற்றி நிற்க
ஆரருள் பாலித்த அமல தேவே
உகப்புறு அறுகம் புல்லாற் செய்யும்
உவப்பான அர்ச்சனையை ஏற்கும் கோவே
மகத்துவமாம் பாரத இதிகா சத்தை
மாமேரு தன்னிலே பொறித்திட் டோயே
அகமினியர் வாழ்பதியாம் திக்கம் தன்னில்
அருள்மிகு நீர்வளையோய், ஆடீ ருஞ்சல்.

## வாழி

அந்தணர் வேதம் வாழி!
ஆகம புராணம் வாழி!
சந்ததம் நீதி வாழி!
தர்மசாத் திரங்கள் வாழி!
செந்தமிழ் மொழியும் வாழி!
சிவநெறி சிறந்து வாழி!
நின்றொளிர் திக்கம் மேவும்
நீர்வளைப் பிள்ளாய், வாழி!!!

## பராக்கு

பிரணவப் பொருளாம் பெருமானே பராக்கு
பெரும்பூதப் படையுடைப் பிரானே பராக்கு
அரனார்க்கும் ஓருண்மை அருளியோய் பராக்கு
அறுமுகன்பால் விளையாடி அகமகிழ்வோய் பராக்கு
பரசமய இருள்நீக்கும் பண்டிதா பராக்கு
பன்னிரு அவதாரப் பரஞ்சுடரே பராக்கு
நிரந்தர இன்பருளும் நிமலரே பராக்கு
நிறைவளஞ்சேர் திக்கம் நீர்வளையோய் பராக்கு.

## எச்சரிக்கை

மூலா தார மூர்த்தீ எச்சரிக்கை
முப்பத் திருமூர்த்தம் கொண்டோய், எச்சரிக்கை
காலா லெழுப்பு குண்டலினி, எச்சரிக்கை
கனகவெற்பிற் பாரதம் தந்தோய், எச்சரிக்கை
மாலார் மகிழும் மருகா, எச்சரிக்கை
மயிலவற்கு வள்ளியம்மை கூட்டியோய், எச்சரிக்கை
நாலாய வேதப் பொருளே, எச்சரிக்கை
நல்வளஞ்சேர் திக்கம் நீர்வளையோய் எச்சரிக்கை.

## லாலி

கூடனுயிர் மாய்த்தவரே, லாலி லாலி
குஞ்சர முகத்தாரே, லாலி லாலி
ஆடலைந்து எழுத்தானோய், லாலி லாலி
ஐம்முகப் பெருமானே, லாலி லாலி
கோடதெழுத் தாணிசெய்தோய், லாலி லாலி
குறுமுனிக்கு அருளியோய், லாலி லாலி
பாடல்சால் பொன்னி தந்தோய், லாலி லாலி
பதியுயர் நீர்வளையோய், லாலி லாலி.

## மங்களம்

மங்களம், சுப மங்களம்
மங்களம், ஜெய மங்களம்
மங்களம், நித்ய மங்களம்
மங்களம், திவ்ய மங்களம்.

உமையம்மை கடைக்கணின் றுதித்தவர்க்கு மங்களம்
ஓமெனும் பிரணவத்தின் உட்பொருட்கு மங்களம்
இமயத்துச் சித்ரகூடத் தெழுந்தவர்க்கு மங்களம்
இமையவர் இடர்களைந்த ஈஸ்வரற்கு மங்களம்
அமலனும் அயனரியும் ஆனார்க்கு மங்களம்
அருமறையும் ஆகமும் அருளினார்க்கு மங்களம்
சமயமெல்லாம் போற்றிசெய் தத்துவர்க்கு மங்களம்
தகுபதியாம் நீர்வளையில் அருள்பவர்க்கு மங்களம்.

## போற்றி

சிவனருள் பாலா போற்றி!
சின்மயா னந்த போற்றி!
அவநெறி ஒழித்தோய் போற்றி!
அமரராட் கொண்டோய் போற்றி!
பவவினை அறுப்போய் போற்றி!
பக்தராட் செய்வோய் போற்றி!
தவநெறி வாழும் திக்கத்
தலத்துளோய் போற்றி போற்றி!!!.

சுபம்